International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# புரட்சிக் கவிஞர்கள் வலியுறுத்திய சாதி ஒழிப்பும், சமத்துவமும்

**கொ. அஞ்சாயி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் பா. திருஞானசம்பந்தம்**
இணைப்பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்-608002

**ஆய்வுச்சுருக்கம்**

சாதி மனிதர்களிடையே பாகுபாடுகளை உருவாக்கி ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்து வதும், சமூக ஒற்றுமைக்கு இடையூறாகவும், மக்கள் வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கிறது. இந்நிலைகள் குறித்து கவிஞர்கள் தங்களது கோபத்தை தங்களது கவிதைகளில் வெளிப் படுத்தி வருகிறார்கள். சாதியம் பல்வேறு வடிவங்களில் மக்களைப் பிளவுபடுத்தி வருகிறது. இக்கொடுமைகளை புரட்சிக் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:** பாரதி, பாரதிதாசன், நிகழ்கால கவிஞர்கள், கவிதைகளில் சாதி ஒழிப்பு, சமத்துவத்தை வலியுறுத்தல்.

## முன்னுரை

கவிஞர்கள் காலந்தோறும் தம் கவிதைகளில் காதல், அன்பு, இயற்கை, சமூகம், அரசி -யல், குடும்பம், வறுமை, மக்கள் ஒற்றுமை குறித்து எழுதியுள்ளார்கள். சாதி மனிதர்களிடை -யே பாகுபாடுகளை உருவாக்கி ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துவதும் சமூக ஒற்றுமைக்கு இடையூறாகவும், மக்கள் வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கிறது.

இன்றையச் சூழலில் சாதியம் பல்வேறு வடிவங்களில் மக்களைப் பிளவுபடுத்தி வருகிறது. இக்கொடுமைகளை கவிஞர்கள் தம் கவிதைகளில் சாதியம் குறித்து கோபமாகவும் கேளிக்கையாவும், மிகுந்த வேதனையோடும் பதிவுசெய்துள்ளார். அக்காலக் கவிஞர்களான பாரதி, பாரதிதாசனோடு நிகழ்காலக் கவிஞர்களும் இதனை கடுமையாகச் சாடியுள்ளனர். அவ்வகையில், இக்கட்டுரை **“புரட்சிக் கவிஞர்கள் வலியுறுத்திய சாதி ஒழிப்பும் சமத்துவ மும்”** என்னும் பொருளில் ஆராய்கின்றது.

## பாரதியாரும் பாரதிதாசனும்

பாரதியாரும் பாரதிதாசனும் தமிழிலக்கியத்தில் சாதி ஒழிப்பையும், சமூக சமத்துவத் தையும் வலியுறுத்திய முக்கிய புரட்சிக்கவிஞர்கள். சாதிப் பிரிவினைகளைக் கடுமையாகச் சாடிய பாரதி, ‘சாதிகள் இல்லையடி பாப்பா’ எனப் பாடினார். அவரைப் பின் பற்றி, பாரதி தாசன் சாதி ஒழிப்பைத் தனது கொள்கையாகக் கொண்டு, தமிழ் மற்றும் இன ஒற்றுமைக்குச் சாதி ஒரு பிணி எனக் கண்டித்தார். பாரதிதாசன் சாதியை ஒரு சமூகப் பிணியாகக் கருதி, அதனை ஒழிக்கக் கலப்புத் திருமணங்களை வலியுறுத்தினார். “சாதிப்பிணிப்பற்ற தோளே, நல்ல தண்டமிழ் வாளினைத் தூக்கும்”[1] என சாதியற்ற சமுதாயமே தமிழ்நாட்டை உயர்த்தும் எனக் கூறினார்.

**சாதி ஒழிப்பு**

நமது சமுதாயத்தைக் கூறுகளாக்கிக் குழிக்குள் போட்டுப் புதைக்கும் சாதிப் பிரிவு களைப் பற்றிப் பாரதியார் கவலைப்பட்டார். சாதிகளை ஒழித்துச் சாதிகள் இல்லாத புதிய சமுதாயத்தை அமைக்க விரும்பினார். "சாதியத் தன்னலக் கொள்கையின் உள்மன நிலைமை ஜனத்திற்கு ஏற்பட்ட மூளை வியாதியைத் தவிரவேறில்லை. தற்காலத்து அந்தநோயின் அறிகுறிகள் எவையெனில் சிவந்த கண்களும், குவிந்த முட்டிகளும், கொடுஞ்சொற்களும், கொடுஞ் செயல்களுமாம்."[2] எனச் சாதிக்கொடுமையால் ஏற்படும் வன்முறைக் கலவரங்களைக் குறிப்பிடுகின்றார். இந்தியச் சமுதாய அமைப்புச் சாதியின் அடிப்படையிலானது. அதனால் ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள், சுரண்டல்கள் (Exploitation), தீண்டாமை போன்றவை ஏற்பட்டன. இவற்றைக் கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்தவர் பாரதியார்.

**தீண்டாமை**

சாதி அடிப்படையில் அமைந்த தீண்டாமை என்பது மிகக்கொடிய ஒன்றாகும். தன் வீட்டில் நாய், பூனை போன்றவற்றிற்கு இடங் கொடுத்து அன்பு செலுத்துகின்ற மனிதன், மனித இனத்தில் உடன்பிறந்தோரைத் தீண்டத்தகாதவர் என விலக்கிவைப்பதும் விலகி வாழ்வதும் பண்பாடற்ற செயல் என்பது பாரதியாரின் கருத்து.

தீண்டாமை என்பது உடலோடு மட்டும் தொடர்பு உடையது அன்று. அது உள்ளத் துள்ளே உறைந்து கிடப்பது. உதட்டளவில் மட்டும் சாதியை ஒழிப்பதாகக் கூறிவிட்டு உள்ளுக்குள்ளே சாதிவெறியை வளர்ப்பதால் எந்தப் பயனும் இல்லை. குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் சாதி என்ற நச்சுணர்வை விதைத்து விடுகின்றனர். அவர்கள் வளரவளர அந்தத் தீய உணர்வும் சேர்ந்தே வளர்கிறது. அந்தப் பிஞ்சு நெஞ்சங் களில் சாதிகள் இல்லை என்ற உணர்வை விதைக்க வேண்டும் என்று கருதிய பாரதியார்,

**சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**

**தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்**[3]

என்று பாடுகிறார். ஒரு பெண் இவ் உணர்வைப் பெற்றால் அந்தக் குடும்பத்தினர் அனை வருக்கும் அந்த உணர்வை ஊட்டுவாள். படிப்படியாகச் சமுதாயம் முழுமைக்கும் அது பரவும் எனக் கருதிய பாரதியார் பெண் குழந்தையை நோக்கிப் பாடுகிறார். மேலும், ஒரு சாரார் மற்ற பகுதியினரைத் தீண்டத்தகாதவர்கள் எனப் புறக்கணிப்பதற்கு என்ன காரணம் எனப் பாரதியார் சிந்திக்கிறார்.

**சமூக நீதிகளைச் சொல்லி அநீதிகளைச் சாடி**

சமூகத்தின் படிநிலைகளில் தோன்றிய வேறுபாடுகளை, முரண்களை, சமூக அவலங் களை கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் கவிதைகள் எடுத்துரைக்கின்றன. இதனை,

**வேலையின்றிக் கூலிகொள்ளும்**

**வித்தைகளைக் கற்றறியோம்.**

**கூலியின்றி வேலைகொள்ளும்**

**கொடும்பாவம் செய்தறியோம்.**[4]

எனச் சமூகநீதிகளைச் சொல்லி அநீதிகளைச் சாடி நாமக்கல் கவிஞர் இவ்வாறு பாடுகிறார். தீண்டாமையைச் சாடி, நாமக்கல் கவிஞர் பாடியுள்ளதும் பாரதி மற்றும் பாரதிதாசன் பாடி உள்ள கவிதைகள் போன்றதேயாகும். சாதி பேதங்களைச் சாடிப் பாடிய பாரதி. இதனை,

**சாதி இரண்டொழிய வேறிலையென்றே**

**தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்த - மென்போம்**

**நீதி நெறியினின்று பிறர்க்குதவும்**

**நேர்மையர் மேலவர் சழவர் மற்றோர்**[5]

என்கிறார் பாரதியார். பாரதிதாசன் ஒருபடி மேல் சென்று உயர்வு தாழ்வு என்றால் சுதந்திரம் எப்படி கிடைக்கும் என வேதனைக் கொண்டார். என்பதனை,

**பிறப்பி லுயர்வுதாழ்வு பேசும்சமூகம் மண்ணில்**

**சிறக்குமோ சொல்வாயடி - சகியே சிறக்குமோ"**

……………………………………………………………..

**இதந்தரும் சமநோக்கம் இல்லா நிலத்தில் நல்ல**

**சுதந்தரம் உண்டாகுமோ? - சகியே சுதந்தரம்**[6]

என்கிறார் பாரதிதாசன். பாரதி, பாரதி தாசனைப் போலவே சாதி பேதங்களைச் சாடிப் பாடிய கவிஞர்களுள் தேசிக விநாயகம் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர். இதனை,

**சாதி இரண்டலால் வேறுளதோ?-ஔவைத்**

**தாயின் உரையும் மறந்தீரோ!**

**ஆதி இறைவன் வகுத்ததுவோ?-மக்கள்**

**ஆக்கி யகற்பனை தான் இதுவோ?**[7]

என்கின்றார். அதியிலே சாதி இல்லை; இறைவன் படைத்ததல்ல சாதி; மனிதனின் கற்பனையே என்கிறார். சாதியற்ற சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்தும் பாரதிதாசனின் புரட்சிகர வரிகளாகும். மனிதர்களுக்குள் சாதி வேற்றுமை பார்ப்பதை எதிர்த்து, சாதிப் பிணிப்பற்ற, ஒற்றுமையான சமூகத்தை உருவாக்கவேண்டும் என்ற முற்போக்கு சிந்தனையை இவ்வரிகள் முன்வைக்கின்றன. இதனை,

**உலகினில் சாதிகள் இல்லை-என்**

**உள்ளத்தில் வேற்றுமை இல்லை**

**கலகத்தைச் செய்கின்ற சாதி-என்**

**கைகளைப் பற்றி இழுப்பதும் உண்டோ?[8]**

என்று பாடி ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் இறைவன் கூறுதல் தவறு எனச் சுட்டிக் காட்டு கிறார். சமூகச் சீர்திருத்த எண்ணம் கொண்ட பாரதியார், இந்தியாவில் காணும் ஒற்றுமை யின்மைக்குக் காரணம் சாதி சமய வேறுபாடுகள் என்றுணர்ந்தார். அவ்வுணர்வுகளை மக்கள் விட்டுவிட்டால் நாட்டில் ஒற்றுமை ஓங்கும் என்பதறிந்தார். இதனை,

**..................... சாதியில்**

**இழிவு கொண்ட மனிதரென்பது**

**இந்தியாவில் இல்லையே[9]**

என்று சாதி சமயம் அற்ற சமுதாயம் அமையக் குரல் கொடுத்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தை வெள்ளையனுக் கும், இந்தியப் பணக்கார உயர் சாதியானுக் கும் இடையே நடந்த போராட்டமாகவே பெரியார் பார்த்தார். *“மற்றபடி பூரண சுதந்திரம் என்பது நம் நாட்டிலுள்ள சாதி, மத வித்தியாசங்கள் நீங்கினால்தான், கிடைத்த சுதந்திரத்தை மக்கள் நலத்திற்கும், தேச நலத்திற்கும் பயன்படுத்தமுடியுமே ஒழிய இந்நிலைமையில் அவனவன் சுயநலத்திற்கும், சுயசாதி நலத்திற்கும்தான் உபயோகிப்பான்”*[10] பெரியாரின் இக்கருத்தினை பாரதிதாசன் தன் பாடல்கள் வழியே வெளிப்படுத்தினார். இதனை,

**பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்**

**சாதிச் சண்டைவளர்க்க தக்க இதிகாசங்கள்**

**கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்**

**கொட்டி அளக்கும் குருக்கள்**
**கணக்கற்றோர்.......[11]**

என்று பாடினார். அரசியல், பொருளியல் விடுதலைக்கு முன் நிபந்தனையாகச் சமுதாய விடுதலையை இங்கே பெரியார் முன் வைத்தார். சாதியத்தையும், சாதிய அமைப்பைச் கட்டிக் காக்கும் மத, இதிகாச புராணப் பொய்களையும் கில்லி எறியாதவரை இந்நாட்டில் விடுதலை என்பது முயற்கொம்பே என்பது பெரியாரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

### சாதியத்தின் வளர்ப்புக் குழந்தை தீண்டாமை

சாதியத்தின் வளர்ப்புக் குழந்தைதான் தீண்டாமை. இக்கொடுமைகளுக்கு ஆளான வர்கள் தலித் மக்களே. இதனால், காலங் காலமாக ஒதுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டவர் கள் தான் தலித் மக்கள். தீண்டாமைக்கு எதிரான கருத்துக்கள் தலித் கவிதைகளில் சித்திரிக்கப் பட்டுள்ளன. பாமா பழையன கழிதலும் என்னும் கவிதைகளில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். இதனை,

**“நீ ஏன்**

**நாய்க்கரே என்ன**

**தொடுற தொட்டா**

**தோசம் ஒட்டிக்கிடுமே?”[12]**

என்கிறான். இதிலிருந்து தொட்டால் தீட்டு என்று தலித் இனமக்களை நம்ப வைத்திருந்த நிலை மாறிவரும் சூழலைக் காணமுடிகிறது

### உயர்சாதினரின் அதிகாரம்

உயர்சாதியினரின் சாதி வழக்கத்தைக் கட்டிக்காக்கவும், தலித் மக்களைப் பரம்பரைத் தொழில் செய்யவும் கட்டாயப் படுத்துகின்றனர். உயர்சாதியினர் தலித் மக்களை தன் அதிகாரத்தின் கீழ் வைத்திருக் கும் நிலையைத் தலித் படைப்பாளர்கள் கவிதைகளில் சித்தரித்துக் காட்டுகின்றனர். இத்தகைய இழிநிலைகளைப் பெற்ற தலித் மக்கள் உயர்சாதி யினரால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

உயர்சாதியினர் தலித் மக்களைக் கீழ்த் தரமான வேலைகளைச் செய்ய வைக்கின்றனர். தனிக் குவளையில் தேநீர் கொடுத்தல், காலணி அணியத் தடை, பொதுக் குளங்களில் குளிக்கத் தடை, மீசை வைக்கத் தடை, பெண்கள் ரவிக்கை அணியத் தடை, தெருவில் நடக்கத் தடை, சைக்கிளில் செல்லத்தடை, வெள்ளை வேட்டி அணியத்தடை எனப் பலத் தடைகளைப் போட்டு தலித் மக்களின் உரிமைகளைப் பறிக்கின்றர்.

### காலணி அணிவதற்கு எதிர்ப்பு

உயர்சாதியினர் மட்டுமே காலணி அணிய வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் அணியக் கூடாது எனும் கட்டுப்பாடு உயர் சமுதாயத்தின் அடக்குமுறையினால் ஊறிப் போன ஒன்று. அதனை, மாற்றியமைக்க வேண்டும் என்ற காலணியைக் கதைக் கருவாக்குவதில் மிகுதி யான முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். உயர் சாதியினர் தான் செருப்பு அணியவேண்டும் என்னும் சமுதாயக் கட்டமைப்பு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவ்வுரிமையை மறுத்தது. கவிஞர் சுகிர்தராணி கவிதைகளில் காலில் செருப்பு அணிந்து கொண்டு செல்கின்ற போது ஊர்க்காரர்களின் பேசும் வசவினை,

**பறையன் என்பீர்**

**மரத்தில் தொங்க விடும்**

**தனிக் குவலையை கொடுப்பீர்...**

**செருப்புப் போட**

**தடை விதிப்பீர்…**

**இனியும்**

**எவையும் மிச்சமில்லை**[13]

எனச், சுகிர்தராணி கவிதைக் குரல்களில் கடுமை காணமுடிகின்றது. காலணி அணியும் உரிமை தலித்துகளுக்கு மறுக்கப்படும் ஆதிக்கச் சாதியின் மனநிலையை கவிஞர் தம் கவிதை வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

**நில அபகரிப்பு**

ஒடுக்கப்பட்ட தலித்மக்களுக்கு ஆங்கிலேயர் ஆட்சியில் பஞ்சமி நிலங்கள் வழங்கப் பட்டதாகவும் அதனை உயர்சாதிக்காரர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டதாகவும் தங்கள் படைப்புகளில் பதிவுசெய்திருக்கிறனர். தங்கள் நிலத்தை உயர்சாதிக்காரர்களிடம் தங்களின் அறியாமையின் காரணமாகப் பறிகொடுத்து விட்டுத் தங்கள் உருவாக்கிய நிலத்திலேயே அடிமையாக உழைப்பதின் அவலத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதனை,

**உழைத்துக் கருத்தத் தோலின்**

**மயிர்க்காலில் கொப்பளிக்கும் வியர்வை**

**படிந்த எங்கள் நிலங்களினின்று**

**துரத்தியடிக்கப்பட்ட நீயும் நானும்**

**அடிமை விலங்குகளால்**

**பிணைக்கப்பட்ட கைகளுடன்…**[14]

என்ற இப்பகுதியில் நிலத்தை ஏமாற்றி அபகரிக்கும் ஆண்டையின் செயல்வழியாக, ஒடுக்கப் பட்ட மக்களின் நிலங்கள் காட்டப்படுகின்றன. இக்கவிதைகளில் நிலத்தை இழந்த ஒடுக்கப் பட்ட மக்களின் பிரதிநிதியாக தலித் மக்களை எடுத்துக் காட்டி, இதுபோல் உயர்சாதியினரின் சூழ்ச்சியினால் நிலத்தை இழந்தவர்கள் எண்ணற்றவர்கள் என்பதை எடுத்துக்காட்டி உள்ளார்.

**மூடநம்பிக்கையும் தலித் ஒடுக்குமுறையும்**

தலித்துகளின் வாழ்க்கையை முன்னிறுத்திப் படைக்கப்பட்ட சாதி அமைப்புகளாலும் புராணங் களாலும், இதிகாசங்களாலும், ஐதீகங்களாலும், சடங்குகளாலும் இறுக்க கட்டமைக் கப்பட்டுள்ள சமூகத்தின் சாதியத்தின் கோரமுகத்தைப் புரிந்துகொள்ள கவிதைகள் துணை நிற்கிறது. இதனை,

**தினந்தோறும்**

**சேரிக் குருவியின் கூவலில்**

**மறைந்திருக்கும் சாதிகளில் தொங்கிக் கிடக்கும்**

**ஆதிக்கம் வலுவுற்று கிலிபிடித்துக் கிடக்கிறது**

**நல்லது நடக்குமா கெட்டது நடக்குமா**

**சகுனம் பார்த்துக்கொண்டிருந்த ஊர்**

**சாமக்கோடங்கியின் குறியில் பிசிறின்றி வந்தது**

**வினை விதைத்தவன் வினையறுப்பான்**

**நீதியின் வழியில் வந்தது**[15]

என்பது போல சாதியத்தின் அதிகாரம் மட்டுமின்றி, சகுனம் பார்த்து அதிகார வரம்புகளையும் நமக்கு உணர்த்துகிறது. அத்துடன் எதிர்நிலை சார்ந்த உள்முரண்க ளையும் விளக்குகிறது. பல்வேறு மைய நிகழ்வுகளின் மூலமாக அதுபற்றியும் அதுபற்றிய சமூக அவலங்களையும் விவாதத்திற்கு உட்படுத்துவதும், பதிவு செய்வது காணத்தது.

**தலித் மக்களின் உரிமை மறுப்பு**

ஊர்த் திருவிழாவின்போது பொங்கல் வைக்க வந்த உயர்சாதிப் பெண்களின் ஆடை காற்றடித்த போது விலகியதை தலித் மக்கள் பார்த்ததால் ஊரை விட்டே தள்ளிவைக்கப் பட்டதை இக்கவிதை காட்டுகிறது. உயர் சாதியினரின் சாதிவெறி எந்தளவு கொடுமை யான விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை கவிதையின் தொடக்கமே எடுத்துக் காட்டுகிறது. இதனை,

**உரிமையற்ற சனங்களின்**

**மனித குண்டுகள்**

**கண்ணீர் கதைகளின்**

**சுருக்கு பைகள்**

**எந்த படைப்பாளனாலும்**

**எழுத முடியாத**

**இலக்கிய ஏடுகள்**

**ஆண்டைகளின்**

**கட்டுப்பாட்டில்**

**இயங்கும் அடிமை**

**செயற்கைக்கோள்கள்**[16]

என்னும் கவிதைகளில் வரும் இப்பகுதி, மக்களுக்குள் பேதம் பார்க்கும் உயர்சாதிக் காரர்களின், மனநிலையினையும் அதனால் மக்கள் அனுபவித்த துன்பங்களையும் அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் என்றால் தங்கள் அடிமைகள் என்னும் எண்ணம் கொண்டு மேல்சாதிக்காரர்கள் விளங்கியதை கவிதை மூலமாக எடுத்துக் காட்டுகிறார்.

**சாதி அடக்குமுறைக்கு எதிரானப் போராட்டம்**

உயர்சாதிக்காரர்கள் பரம்பரைப் பரம்பரையாய் நம்மை அடிமைகளாக வைத்து அவ மானங்களை உருவாக்கி, அசிங்கமானவர்கள்

மானம், மரியாதை இல்லாதவர்கள், தீண்டத் தகாதவர்கள் என்று நம்மை நம்பவைத்து நாமாகவே இவர்களை விட்டு ஒதுங்கிக் கொள்ளும் படி செய்துள்ளார்கள் என்று கூறுவதுடன்,

ஆதிக்கச் சாதியினருக்குக் கூடை, முறம் போன்றவற்றை செய்து கொடுப்பதுடன் சாக்கடை அள்ளித்தெருவைக் கூட்டித்தூய்மை செய்பவர்கள். ஆக, இவ்விதம் கடினப்பட்டு உழைக்கும் மக்களின் உழைப்பை உறிஞ்சி உட்கார்ந்து கொண்டு சுகமாய் வாழ்கிறார்கள் ஆதிக்கச் சாதியினர் என்பதைச் சுட்டுகிறார். மேலும்,

**காடு காணிகளில்**

**உழைத்து ஈர்க்குச்சி போல**

**இளைத்து வெறுங்கய்யா**

**நிற்கின்றோம்**......

**தொந்தி சரிய**

**வேதம் முழகின்றாய்**

**உனது அறிவு**

**தகுதி திறமை**

**வெங்காயம் எல்லாம்**

**ஒருவேளை பசியாற கூட**

**உதவியது இல்லை**......[17]

என, அரச முருகுபாண்டியன், கயர்லாஞ்சி இந்தியாவில் தான் இருக்கிறது என்னும் கவிதையில் சாடுகின்றார். வறுமையில் போராடும் நம்முடைய சேரியையும் கொளுத்தும் நிலையில் சேரிமக்களுக்கு ஆதிக்கச்சாதியினர் கூலிவேலை தர மறுத்த பொழுது, தமது வீட்டு வேலை களையும், வயல் வேலைகளையும் செய்துவிட்டு தாங்கள் மனக் குமுறல்களை வெளிப் படுத்துகிறார் கள்.

## தொகுப்புரை

அக்கால கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் கவிதைகளிலும், நிகழ்கால கவிஞர்- களின் கவிதைகளிலும் காலத்திற்கேற்ப புதிய கற்பனைகளையும், பழமை போற்றும் பாங்கி னையும் கொண்டு பல்துறைகளிலும் படைப்புகள் பலவும் படைத்திருக்கின்றனர். சமூகத்தில் புரையோடி கிடக்கின்ற சாதியத்தை தங்கள் கவிதைகளில் வாயிலாக மெருமளவில் எதிர்ப் பையும் பதிவுசெய்துள்ளனர். மேலும், சாதியினை ஒழித்து சமத்துவத்துவமான சமூகத்தைப் படைக்க தங்கள் புரட்சிகர கவிதை வாயிலாக வலியுறுத்துவதை காணமுடிகின்றது.

## துணை நூற்பட்டியல்

1. பாரதிதாசன் கவிதைகள் 2, 25, பாரதி உள்ளம், மணிவாசகர் பதிப்பகம், லிங்கித் தெரு, சென்னை, பா.3-4
2. சாதி ஒழிப்பு, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தென்மொழி பதிப்பகம் பாவலரேறு தமிழ்க்களம், மேடவாக்கம் கூட்டுச் சாலை, சென்னை, 601302.
3. பாரதியார், பாப்பாப் பாட்டு, இந்தி பிரச்சார் பிரஸ், சென்னை, பா. 15
4. கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பாடல்கள், பாகம்-2, தாலாட்டு,118, பா.6
5. பாரதியார், பாரததேசம், ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம், பா.1,3
6. பாரதிதாசன், சமத்துவப் பாட்டு, ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம், பா. 5,7
7. கவிமணியின் கவிதைகள், ஒற்றுமையே உயர்நிலை, பா.9
8. பாரதிதாசன், காதற்பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், லிங்கித்தெரு, சென்னை,பா.3
9. பாரதிதாசன், விடுதலை! விடுதலை!, இந்தி பிரச்சார் பிரஸ், சென்னை, பா. 2
10. பெரியார், குடியரசு இதழ், 14.09.1930.
11. பாரதிதசான் கவிதைகள், தொகுதி-1 சஞ்சீவி பர்வதத்தின் சாரல், மணிவாசகர் பதிப்பகம், லிங்கித் தெரு, சென்னை, பா.1
12. பாமா, பழையன கழிதலும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, ப.29
13. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, ப.31.
14. யாழன் ஆதி, செவிப்பறை, தேநீர் பதிப்பகம், சென்னை, ப.8
15. ரகுதேவன், பூட்டிய கதவு பூட்டியே கிடப்பதில்லை, சந்தியா பதிப்பகம், **அசோக் நகர், சென்னை** ப.47-8
16. தலையாரி, எங்கே எமது முகம், பஃறுளி பதிப்பகம், சென்னை ப.18
17. அரச முருகு பாண்டியன், கயர்லாஞ்சி இந்தியாவில் தான் இருக்கிறது, தமிழ் கூடம் பதிப்பு, கலையும் இலக்கியமும், தி.நகர், சென்னை, ப.18